கார்லோவுக்கு ஒரு ஆடு

ஜூடித் லாரன்ஸை

ஓவியங்கள்-லிஸ் டாபர்


தமிழில்: அருண்குமார் ஆண்டவன்



கார்லோவுக்கு ஒரு ஆடு



ஜூடித் லாரன்ஸ்
ஓவியங்கள்-லிஸ் டாபர்
தமிழில் அருண்குமார் ஆண்டவன்



கார்லோவுக்கு ஒரு ஆடு

கார்லோ காத்திருந்த நாள் இதுதான்.

அவனும், அவனது அப்பாவும் ஒரு ஆடு வாங்கப்போகிறார்கள்.

கார்லோ காலை உணவை வேகமாக சாப்பிட்டான்.

‘நம்முடைய ஆடு மிகவும் அழகாக இருக்கப்போகிறது’ என்று அவனுடைய அம்மாவிடம் கூறினான்,



‘அவள் கருப்பான சிறிய கால்களும், பெரிய பழுப்புநிற கண்களும் கொண்டிருப்பாள்,

அவளது முடி மென்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்’.

‘கார்லோ, சீக்கிரம் வா’ என்று அழைத்தாள் அவனுடைய அம்மா.

கார்லோவின் தந்தை காத்திருந்தார்.

‘இன்று சந்தையில் நிறைய ஆடுகள் இருக்கும்’என்று அவர் சொன்னார்.

‘அவற்றிலிருந்து நமக்குத் தேவையான ஒன்றை தேர்ந்தெடுப்போம்.’

அவர்கள் நகரத்தை நோக்கி குன்றிலிருந்து இறங்கி நடந்தனர்.

வழியில் அவர்களுடைய நிறைய நண்பர்களை சந்தித்தனர்.

‘நாங்கள் ஒரு ஆடு வாங்கப் போகிறோம்.’ என்று கார்லோ அவர்களிடம் உரக்கக் கூவினோம்.

‘மிகவும் அழகான ஒரு ஆடு.’

‘நீ விரும்பியது போல ஒன்றை நீ பெறுவாய்," என்று நம்புகிறேன் என ஒரு நண்பன் உரக்கக் கத்தினான்.

‘நாங்கள் பெறுவோம், நாங்கள் பெறுவோம்” என்று கார்லோ சொன்னான்.





சந்தை என்பது மிகவும் பரபரப்பான இடம்.

‘ஆடுகள், ஆடுகள், ஆடுகள்’ என ஒரு முதியவர் கூவினார்.

‘நீங்கள் ஆடு வாங்க விரும்புகிறீர்களா?’ என ஒருவர் கார்லோவிடம் கேட்டார்

“ஆம்,” என்றான் கார்லோ.

“உங்களிடமுள்ள சிறப்பான ஒரு ஆட்டைக் காட்டுங்கள்.”

அம்மனிதன் மிகவும் அழகான ஒரு ஆட்டை அவர்களிடம் காண்பித்தான்.

அதன் முடி மென்மையாகவும், பளபளப்பாகவும் இருந்தது.

அது கருப்பான சிறிய கால்களும், பழுப்புநிற கண்களும் கொண்டிருந்தது.

“அப்பா,” என்றான் கார்லோ.

“நமக்குத் தேவையான ஆடு இதுதான்.

நான் இதுவரை பார்த்ததில் மிகவும் அழகான ஆடு இதுதான்.’

‘இதன் விலை எவ்வளவு?’ என கார்லோ அம்மனிதனிடம் கேட்டான்.



அம்மனிதன் அவர்களிடம் விலையைச் சொன்னபோது

கார்லோவின் அப்பா ஏமாற்றமடைந்தார்.

'நம்மிடம் போதுமான அளவு பணம் இல்லை. '

கார்லோவும் அவரது தந்தையும் அங்கிருந்து கிளம்பினர்.

"பொறுங்கள்! பொறுங்கள்!" என்று அந்த மனிதன் கூப்பிட்டான்.

'உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?'

கார்லோவின் அப்பா தன்னிடமிருந்த பணத்தை அந்த முதியவரிடம் காண்பித்தார்.

'உன்னிடம் காண்பிக்காத இன்னொரு ஆடு என்னிடம் உள்ளது,' என்று அந்த முதியவர் சொன்னார்.

அது சிறியதாகவும், மெலிதாகவும் இருப்பதால் யாரும் அதை விரும்பவில்லை.



'குறைவான பணத்தைக் கொண்டும் நீங்கள் இதைப் பெறலாம்.'

"தயவுசெய்து," என்றான் கார்லோ.

'அந்த ஆட்டை எங்களிடம் காட்டுங்கள்.'

முதியவர் அவர்களிடம் அந்த ஆட்டைக் காட்டினார்.

அது கார்லோவிடம் வந்தது.

அது கார்லோவைப் பார்த்து,

அவனது கையை முகர்ந்து பார்த்தது.

‘என்ன ஒரு சோகமான முகம்!’ என்றான் கார்லோ.

‘இது அழகாக இல்லை, ஆனால் அதற்கு என்னைப் பிடித்திருக்கிறது என நினைக்கிறேன்.’

‘நாம் அதை வாங்கலாம்,’ என

கார்லோவின் தந்தை கூறினார்.





‘வா, குட்டி ஆட்டுக்குட்டியே.’

கார்லோ கொஞ்சினான்.

‘நீ ஒரு இனிய வீட்டைப் பெறப் போகிறாய்.’

கார்லோவின் தோழன், பெட்ரோ, இந்த அசிங்கமான ஆட்டுக்குட்டியை எங்கிருந்து பெற்றாய் ? என்று கேட்டான்.



டீனா கார்லோ மற்றும் அவனது தந்தைக்குப் பின்னால் பாதையைத் தொடர்ந்து மெதுவாக நடந்தாள்.

"அப்பா பாருங்கள்,“ என கார்லோ அழைத்தான்.

"டீனா இப்போது சோகமாகத் தெரியவில்லை.

நாம் அவளிடம் அன்பாக நடந்துகொள்வோம் என அவள் அறிந்துகொண்டாள் என நினைக்கிறேன்.'


"அது அசிங்கமாக இல்லை," என்றான் கார்லோ.'

'அழகாக இருக்கிறது!'

'நீ அதை என்னவென்று அழைப்பாய்? என்று மற்றொரு நண்பன் கேட்டான்.

'நான் அதை டீனா என்று அழைப்பேன்', என்று கார்லோ பதிலளித்தான்.





அன்றிரவு கார்லோ டீனாவுக்கு ஒரு இழுவண்டியை தயார்செய்தான்.

“அவள் நமது வேலையில் நமக்கு உதவுவாள்,” என்று அவன் தன் தந்தையிடம் கூறினாள்.

நாளைக்கு சந்தையில் விற்க, எட்டு வெங்காய மூட்டைகள் நம்மிடம் இருக்கும். டீனா அவற்றை இழுவண்டியில் இழுத்துச் செல்வாள்.

நீங்கள் சந்தைக்கு போகவேண்டி இருக்காது.

அடுத்த நாள் காலை, கார்லோ வெங்காய மூட்டைகளை வண்டியில் ஏற்றினான்.

டீனா இழுக்க வண்டி நகரத்தொடங்கியது.

“விடைபெறுகிறேன்,” என்றான் கார்லோ.

ஆடு பாதையில் சீரான வேகத்தில் சென்றது.

அந்த சிறிய வண்டி அவளுக்குப் பின்னால் இடித்துக்கொண்டே சென்றது.

அவர்கள் சந்தையை அடைந்ததும், கார்லோ வண்டியை நிறுத்த இடத்தைக் கண்டுபிடித்தான்.

டீனா அதன் அருகிலேயே காத்திருந்தாள்.

கார்லோ கூவத்தொடங்கினான்.

'என்னிடம் வெங்காயம் விற்பனைக்கு உள்ளது'!

ஒரு பெண் நின்று வெங்காயத்தைப் பார்த்தாள்.

நீங்கள் இவற்றை வளர்த்தீர்களா? அவள் கேட்டாள்.





“ஆம்,” என்றான் கார்லோ.

அந்தப் பெண் கொஞ்சம் வெங்காயம் வாங்கினாள்.

கார்லோ பணத்தை அவனுடைய சிறிய பையில் போட்டான்.

வேறு பலரும் அவனது காய்கறிகளை வாங்கினர்.

நண்பகலில், உணவு சாப்பிட கார்லோ வியாபாரத்தை நிறுத்தினான்.

திடீரென்று அவன் ஒரு சத்தத்தைக் கேட்டான்.

கர்ச்! கர்ச்! கர்ச்!

அவன் திரும்பிப் பார்த்தான்.

டீனா அவனது வைக்கோல் தொப்பியை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"ஓ, டீனா!"

உனக்குப் பசிக்கிறதா? என்றான் அவன்.

கார்லோ டினாவுக்காக கொஞ்சம் கேரட்டுகளை வாங்கினான்.

விரைவிலேயே அனைத்து வெங்காயங்களும் விற்றுவிட்டன.

'வீடு திரும்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது.' என்று கார்லோ டினாவிடம் கூறினான்.





டினா வண்டியை பாதைமேல் இழுத்துக்கொண்டு நடந்தாள்.

மேலே போகப்போக கார்லோ சில அழகான பூக்களைப் பார்த்தான்.

"பொறு, டினா," என்றான் அவன்.

'நான் அம்மாவுக்காக சில பூக்களைப் பறித்துக்கொள்கிறேன்.'

பாதையின் உயரமான இடத்தில் கார்லோ அவனது தந்தையைச் சந்தித்தான்

‘நான் எல்லா வெங்காயங்களையும் விற்றுவிட்டேன்’ என்றான் கார்லோ.

‘நன்று’ என்றார் தந்தை.

‘நீயும், டீனாவும் சிறப்பாக வேலை செய்துள்ளீர்கள்.’

கார்லோ அந்தப் பூக்களைத் தன் அம்மாவிடம் கொடுத்தான்.

அம்மா, கார்லோவுக்கு நன்றி கூறினாள்.

‘உனது தொப்பி என்ன ஆனது?’ என்று அம்மா கேட்டார்.

‘அது எங்கே உள்ளது?’



‘டீனா மிகுந்த பசியாக இருந்தாள், நான் பார்க்காதபோது அவள் என் தொப்பியைச் சாப்பிட்டுவிட்டாள்.’ என்று கார்லோ பதிலளித்தான்.

அவனுடைய அம்மா சிரித்தாள்.

‘நான் உனக்கு இன்னொரு தொப்பி செய்து தருகிறேன். நம்மிடம் தேவையான அளவு வைக்கோல் உள்ளது.’ என்று அம்மா சொன்னார்.





அவர்கள் சாப்பிட்ட பிறகு,
கார்லோ டீனாவுக்கு
உணவளித்தான்.

அவளுக்கு மிகவும் பசியாக
இருந்தது.

‘நீ ஒரு நல்ல ஆடு, டீனா.’ என்று

கார்லோ கூறினான்.

’ நீ எங்களுடன் வாழ வந்ததற்கு
நான் மிகவும்
மகிழ்ச்சியடைகிறேன்.’

“மா,” என்று டீனா
பதிலளித்தாள்.

‘இனிய இரவு, குட்டி
ஆட்டுக்குட்டியே,’ என்றான்
கார்லோ .

ஒரு நாள் மாலை, கார்லோவால் டீனாவை எங்கும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவனது வீட்டை ஒட்டிய வயல்வெளிகளில் அவன் தேடினான்.

அதன் பெயரை உரக்க அழைத்தவாறே மேலும், கீழும் நடந்தான்.

டீனா வரவில்லை.



‘அவள் தொலைந்துவிட்டாளோ என எனக்கு பயமாக இருக்கிறது,’ என்று கார்லோ கூறினான்.

‘அவள் திரும்பி வருவாள்.’ என்று கார்லோவின் தந்தை கூறினார்.

‘அவள் வெகுதூரம் சென்றிருக்க மாட்டாள்.’

‘இந்நேரம், டீனா தூங்குவதற்கு பாதுகாப்பான இடத்தை கண்டுபிடித்திருப்பாள்’ என்று கார்லோவின் தாய் கூறினார்.

காலையில் கார்லோ மீண்டும் டீனாவைத் தேடினான், ஆனால் அவனால் அவளை கண்டுபிடிக்க முடியவில்லை.

‘ஒருவேளை அவள் மலையிலிருந்து கீழே இறங்கி சந்தைக்கு போயிருப்பாள்’ என்று கார்லோவின் தந்தை கூறினார்.



அன்றிரவு, கார்லோ படுக்கைக்குச் சென்றபிறகு, டீனாவின் சத்தத்தைக் கேட்டதுபோல எண்ணினான்.

‘மா,மா’

அவன் சட்டென்று எழுந்து, வெளியே சென்றான்.

‘நீ அங்கு சென்று பார்’.

“நான் சென்று பார்கிறேன்,” என்றான் கார்லோ.

அவன் வேகமாக மலையிலிருந்து கீழே இறங்கினான்.

அவன் சிலபேரிடம், அவனது ஆட்டைப் பார்த்தார்களா என கேட்டான்.

யாரும் அதைப் பார்க்கவில்லை.

கார்லோ வருத்தமாக வீடு திரும்பினான்.



மீண்டும் அவன் டினாவின் அழைப்பை கேட்டது போல உணர்ந்தான்,

'மா, மா.'

'அது டினா!' என அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

அவன் தன் தந்தையை எழுப்பினான்.

"டினா கூப்பிடுவதை நான் கேட்டேன்," என்று கார்லோ அவரிடம் கூறினான்.

'அவள் கண்டிப்பாக மலையின் உச்சியில்தான் இருக்க வேண்டும்'

"நான் கைவிளக்கைக் கொண்டு வருகிறேன்." என்று அவனது தந்தை கூறினார்.

கார்லோவும் அவனது தந்தையும் மலைப்பாதையில் ஏறத் தொடங்கினர்.



மலையில் மிகவும் குளிராக இருந்தது.

வானம் இருண்டிருந்தது, நிலவைக் காணவில்லை.

கைவிளக்கில் இருந்து வந்த வெளிச்சம் அவர்களுக்கு பார்க்க உதவியது.

கார்லோ தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்தான்.

'டீனா! டீனா!

நீ எங்கே இருக்கிறாய்?'

இறுதியில், அவர்கள் அவளுடைய குரலைக் கேட்டனர்.

'மா, மா.'

சட்டென்று கார்லோ நின்றான்.

அங்கே இருந்த உயரமான புற்களுக்கு இடையில் அவன் டீனாவைப் பார்த்தான்.

விளக்கு வெளிச்சத்தில், அவன் அவளுடன் இருந்த குட்டி ஆட்டைப் பார்த்தான்.

'அப்பா, பாருங்கள்!' என கார்லோ மெல்லிய குரலில் சொன்னான்.

'டீனாவுக்கு ஒரு அழகான குழந்தை பிறந்திருக்கிறது.'





கார்லோ கைவிளக்கை
எடுத்துக்கொண்டான்

டினா அவனைப் பின்தொடர்ந்தாள்.

கார்லோவின் அம்மா வீட்டில்
அவர்களுக்காக காத்திருந்தாள்.

'குட்டி ஆடு எவ்வளவு அழகாக
இருக்கிறது!' என்று அம்மா சொன்னார்.

அது மென்மையான,
பளபளப்பான முடியையும்,
சிறிய கால்களையும்
கொண்டிருந்தது.'

கார்லோவின் அப்பா
ஆட்டுக்குட்டியைத்
தூக்கினார்.



அம்மா கொஞ்சம் காய்ந்த வைக்கோலை வைத்திருந்தாள்.

அவள் டீனாவுக்கும், அவள் குழந்தைக்கும் படுக்கையைத் தயார் செய்தாள்.

கார்லோ டீனாவிடம் மெதுவாகக் கூறினான்,

நீ இப்போது பாதுகாப்பாக இருக்கிறாய் டீனா, உன்னுடைய குழந்தையும் கூட!'

"மா," என்றாள் டீனா.



ஒரு நாள் கார்லோவின் தந்தை சொன்னார்,

நீயும், டீனாவும் சந்தைக்குச் செல்வதற்கான நேரம் இதுதான்.

'நம்மிடம் விற்பனைக்காக நிறைய வெங்காய மூட்டைகள் உள்ளன.'

கார்லோ அந்த மூட்டைகளை வண்டியில் ஏற்றினான்.

அவனும் டினாவும் நடக்கத்தொடங்கினர்.

ஆட்டுக்குட்டி அவர்களைப் பின்தொடர்ந்தது.

"கார்லோ!" என பெட்ரோ அழைத்தபோது அவர்கள் வெகுதூரம் சென்றிருக்கவில்லை.

‘அந்த அழகான ஆட்டுக்குட்டியை எங்கிருந்து பெற்றாய்?’

‘இது டீனாவின் குழந்தை,’ என்று கார்லோ பதிலளித்தான்.

‘இப்போது நேசிக்க எங்களிடம் இரண்டு அழகான ஆடுகள் உள்ளன.’



முடிவு